# இனிய உதயம்

ரூ.10/-






வணக்கம்

'இனிய உதயம்' வாசகர்களுக்கு இவ்விதழில் இடம் பெற்றிருக்கும் 'விண்வெளிப் பயணம்' நாவல் புதுமையான அனுபவமாக இருக்கும். ஏனெனில், இதில் இடம் பெற்றிருக்கும் கதாபாத்திரங்களும் களங்களும் யதார்த்தத்திற்கு மாறுபட்டவையாக இருப்பதுதான். மேலோட்டமாகப் பார்த்தால் இளம் வயதில் நாம் படித்த 'மந்திரத் தீவில் மாய இளவரசி', 'பவழத் தீவில் பத்து தலைப் பெண்' போன்ற கதைகளைப்போல் இது தோன்றும். ஆனால் உள்ளடக்கம் அதுவல்ல. இல்லாததுபோல் இருக்கும் எல்லா விஷயங்களும் இங்கு இருப்பவை தான் என்பதையும்; இந்த அறிவியல் உலகம் மாய சுகத்துக்காக வாழ்க்கையை எப்படித் தொலைத்து வருகிறது என்பதையும் இந்த நாவல் பளிச்சென மூளையில் பதிய வைக்கிறது. இந்த நாவலின் நுட்பத்தை 'இனிய உதயம்' வாசகர்கள் எளிதில் உணர்ந்து கொள்வார்கள் என்பது தெரிந்ததே.

'மேலும், இலக்கிய சிம்மம் ஜெயகாந்தன் அவர்களின் சிறப்புப் பேட்டி இவ்விதழை கம்பீரத்துடன் பொலியச் செய்கிறது. தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் அனைவருக்கும் நன்றி.

அன்புடன்,
ஆசிரியர்.



# விண்வெளிப் பயணம்

கிஷன் சந்தர்